

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**கே: நோய் கண்டறிதலில் PROMs பயன்படுத்தப்படுகிறதா?**

பதில்: இல்லை, PROMs உங்கள் உடல்நல பயணத்தில் நீங்கள் எவ்வளவு நன்றாக இருக்கிறீர்கள் என்பதை அளவிடுகிறது. இது நோய் கண்டறிதலுக்கோ அல்லது அவசரகால சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்கோ அல்ல.

**கே: எனது உடல்நலத் தகவல்கள் எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்தப்படும்?**

பதில்: உங்கள் தனியுரிமையில் நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம். உங்கள் பதில்கள் மிகவும் இரகசியமாக வைக்கப்படும், மேலும் உங்கள் மருத்துவக் குழுவினர் மட்டுமே அவற்றை அணுக முடியும்.

**கே: நான் சரியாகப் பதிலளிக்கிறேனா?**

பதில்: சரியான அல்லது தவறான பதில்கள் எதுவும் இல்லை. உங்கள் உணர்வுகளின் அடிப்படையில் உண்மையாக பதிலளியுங்கள்.

NHG Health

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் உங்கள் மருத்துவக் குழுவை அணுகவும்.

NHG Health



# Patient Reported Outcome Measures

**நோயாளியால் தெரிவிக்கப்பட்ட இறுதிவிளைவு குறித்த அளவீடுகள் (PROMs)**

**உங்கள் PROMs வழிகாட்டி**

# ஊங்கள் சிகிச்சையில் உங்கள் குரல் முக்கியம்

நோயாளியால் தெரிவிக்கப்பட்ட இறுதிவிளைவு குறித்த அளவீடுகள் **(Patient Reported Outcome Measures – PROMs)** என்ற வினாப்பட்டியல்கள் உங்களுடைய உடல்நலத்தைப் பற்றி விவரங்கள் தெளிவிக்க உதவுகின்றன:

- உங்கள் அன்றாட உணர்வுகள் எப்படி உள்ளன
- உங்கள் உடல்நிலை உங்கள் அன்றாட வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது
- உங்கள் உடல்நலத் தேறல் எவ்வாறு உள்ளது

PROMs-வழி உங்களிடம் கேட்கப்படலாம்:



உங்கள் ஒட்டுமொத்த நல்வாழ்வு



குறிப்பிட்ட உடல்நிலை பாதிப்பு

## PROMs எவ்வாறு பயனளிக்கின்றன?

உங்கள் மருத்துவக் குழுவினருடன் உறவை வலுப்படுத்தும்

உங்கள் உடல்நல தேவைகளுக்கு ஏற்றவாறு சிகிச்சை அளிக்கப்படும்

காலப்போக்கில் உங்கள் உடல்நல முன்னேற்றத்தைத் தொடர்ந்து பார்க்கலாம்


உங்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மீது உரிமை எடுத்துக்கோள்ள உங்களுக்கு அதிகாரம் அளிக்கின்றன

**உங்கள் PROMs வினாப்பட்டியல்களைப் பார்க்க NHG Health செயலியைப் பதிவிறக்கவும்.**

# நான் வினாப்பட்டியல்களை எப்படி பதிலளிக்கவும்?


*NHG Health* செயலியைப் பதிவிறக்கி இந்த எளிய வழிமுறைகளைப் பின்பற்றவும்:

1





**My Care Plan** தட்டவும்

2





**Questionnaires** தட்டவும்

3





**For an upcoming appointment** என்பதன் கீழ் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வினாப்பட்டியலைத் தட்டவும்

4





உங்கள் உடல்நலத்தை மிகச் சரியாக விவரிக்கும் விருப்பங்களை தேர்ந்தெடுக்கவும்

5




உங்கள் பதில்களைச் சரிபார்த்த பிறகு **Submit** தட்டவும்

6




உங்கள் வினாப்பட்டியலுக்கு அருகில் ✅ குறியீடு தோன்றும்